அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே உறுப்பினர் அதைப்பற்றி அச்சப்படத் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கரையை வலுப்படுத்துவதில் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த ஆற்றங்கரைகளை வலுப்படுத்துவது என்று அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றினுடைய கரைகளிலே இருக்கின்ற அனைத்துக் கரைகளையும் நவீனப்படுத்துகின்ற ஒரு திட்டத்தை இந்த அரசு வைத்திருக்கின்றது. அதற்காக மத்திய அரசினுடைய உதவியையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கோரி இருக்கிறார்கள். ஆகவே பொதுவாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் காவிரிப் பகுதியில் இருக்கின்ற அனைத்துக் கால்வாய்களையும் சீரமைக்கின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் தற்போது உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 105—திரு. இரா. நடேசன், டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மற்றும் திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

105—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

*35 **திரு. இரா. நடேசன்:**

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:

திரு. கு. லாரன்ஸ்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

1991 செப்டம்பர் 28]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10.05)

திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கல்லூரிகள் எல்லாம் தனியார் கல்லூரிகளாக இருக்கின்றன என்பது மட்டுமல்லாமல், அங்கு கல்வி கற்க வேண்டும் என்று நினைக்கிற மாணவர்களுக்கெல்லாம் அண்டை மாநிலம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அங்கெல்லாம் இடவசதி கிடைக்காமல் அவர்களெல்லாம் கஷ்டத்திலே இருக்கிறார்கள். ஆகையினால், மீண்டும் பரிசீலனை செய்து கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய நிதி நிலைமை காரணமாக இந்தத் திட்டம் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 400 கோடி செலவில் ஒரு ரப்பர் தொழிற்சாலைக்கு ஒப்புதல் கொடுத்திருப்பதற்கு குமரி மக்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு குமரி மாவட்டத்தில் அரசின் சார்பாக ஒரு கல்லூரி கூட இல்லாத காரணத்தால் அந்த விவசாயக் கல்லூரியை அடுத்த வருடமாவது அமைக்க அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை இந்த நாட்டுக்கு வழங்கியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு நிதிநிலைமைக்குத் தக்கவாறு இந்த அரசு அது பற்றி பரிசீலிக்கும்.

[1991 செப்டம்பர் 28

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 வருடங்களுக்கு முன்னால் கோவை விவசாயக் கல்லூரியின் சார்பாக ஒரு ஹார்ட்டிகல்ச்சர் பிரிவு ஒன்றை விரிவாக ஆரம்பிக்க இங்கே ஏற்பாடுகள் செய்யப்பட்டன. விவசாயக் கல்லூரி அமைய வேண்டும் என்பதற்காக நாகர் கோவிலில் ஒரு அலுவலகம் அமைந்து இரண்டு வருடங்களாக இது சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக அரசுக்கு தனியார் நிலம் கொடுக்காத காரணத்தாலே அந்தக் கல்லூரி அமையாமல் இருந்ததாக நான் கருதுகிறேன் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லாரன்ஸ், வேளாண்மைக் கல்லூரி தொடங்குவது பற்றிய கேள்வி. இது பற்றி நேரிடையாக உங்கள் கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. கு. லாரன்ஸ்: இன்றைக்கு நிதி பற்றாக்குறை இருந்தாலும் கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே விவசாயக் கல்லூரியை அமைக்கும் எண்ணம் வருகிறபோது, ஒரு விவசாயக் கல்லூரியை அங்கே ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக் கலை ஆராய்ச்சி மையம் திருப்பதிசாரம் மற்றும் பேச்சிப்பாறை பகுதியிலே இருக்கிறது. கல்லூரி அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகிற காலத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம்தான் எல்லா வெரைட்டி களும் விவசாயம் செய்யும் மாவட்டம். குறிப்பாக ரப்பர், தேங்காய், நெல், எல்லாம் விளைகின்ற மாவட்டம். அந்த மாவட்டத்தில் விவசாயக் கல்லூரியை அமைக்க—அரசினுடைய நிதிநிலைமை எங்களுக்கு நன்றாகத் தெரியும்—வருகிற நிதி ஆண்டிலாவது மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 28]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு ஒரே பதிலைத்தான் என்னால் திரும்பத் திரும்பச் சொல்ல முடியும். அரசிடத்திலே இருக்கிற நிதிப் பற்றாக்குறை காரணமாக இதுபோன்ற திட்டம் இப்போது இல்லை. கொடுக்க வேண்டிய காலத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொடுப்பார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஜி. வேணு கோபால். இது கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியைப் பற்றிய கேள்வி.

திரு. என். ஜி. வேணுகோபால்: இம்மாதிரி அரசு வேளாண்மைக் கல்லூரியை அமைக்கும்போது எந்த மாதிரி கருத்துக்களின் அடிப்படையில் அந்தக் கல்லூரிகள் அமைக்கப் படுகின்றன என்று அறிய விரும்புவதோடு, ஏனென்றால் என் னுடைய தொகுதியிலே இருக்கின்ற . . .

முற்பகல் 10.10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த மாதிரி கேள்வி கேட்காதீர்கள், எத்தகைய அணுகுமுறையில் இத்தகைய கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன என்ற அந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றி தனிக்கேள்வி போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 106—திரு. டி. எம். ரங்கராஜன், திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

106—

அனுமதி பெறாமல் அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டுபவர் மீது நடவடிக்கை.

* 109 **திரு. டி. எம். ரங்கராஜன்:**

திரு. வி. கே. லட்சுமணன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: